என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தரம் உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அந்தவகையில், அந்தப் பகுதி அதிகமான கால்நடைகள் உள்ள பகுதி; அதன்மூலம் தரமான பால் கிடைக்கிறது. அதிலிருந்துதான் புகழ்பெற்ற பால்கோவா உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும், மருந்தகங்களில் மருத்துவச் சிகிச்சை அளிக்க முடியாத நோய்களுக்கும், எலும்பு முறிவு மற்றும் மேல்சிகிச்சை மேற்கொள்வதற்கும் இந்தப் பகுதி கால்நடை வளர்ப்போர் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றத் தேவையான இட வசதி உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர தாங்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

கூட்டுறவு நூற்பாலை

***51161—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருத்தணி தொகுதியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு, திருத்தணி தொகுதியில் புதிதாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

முற்பகல் 10—50

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்து சிறந்து விளங்கிய தலைவர்கள் மத்தியில் சிறந்தே பிறந்தவர் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முடியாது என்பது மூடத்தனம், முடியும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் மூலதனம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வறுமை இல்லை, துன்பம் இல்லை, எதற்கும் பஞ்சம் இல்லை, துயரமும் இல்லை. காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிதான். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எல்லா துறைகளும் அபார வளர்ச்சி பெற்றுள்ளன. இந்தியத் திருநாட்டின் மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியான, ஒரு வழிகாட்டி மாநிலமாகத் தமிழகம் திகழ்வதற்கு மேலும் ஒரு காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு தலைசிறந்த நிருவாகி. அது மட்டுமல்ல; ஒரு தலை சிறந்த பத்திரிகையாளர். ஆங்கிலப் புலமையும், தமிழ்ப் புலமையும், பன்மொழிப் புலமையும் ஒருங்கே பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தேசத்தின் சிறந்த தலைவர்கள் அனைவருமே, மாண்புமிகு அம்மா அவர்களைப் போன்று பத்திரிகையாளர்களாக, சிறந்த நிருவாகிகளாக இருந்திருக்கிறார்கள். தேசத்தின் உயர்வுக்கு உழைத்து, உயர்வளித்து உள்ளவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தேசப்பிதா மகாத்மா காந்தி, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்

2016 பிப்ரவரி 20]

ஜவஹர்லால் நேரு, சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர், பகுத்தறிவு தந்தை பெரியார், பொதுவுடைமைவாதி தோழர் ஜீவா, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அவருக்கு அடுத்ததாக ஒன்பதாம் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள். இவர்கள் எல்லாம் ஒரு சிறந்த பத்திரிகையாளர்களாக இருந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சாமானிய மக்கள் சாம்ராஜ்யத்தில் சந்தோஷத்தை உறுதிப்படுத்தி, சமூக வளர்ச்சிக்கு, சமூகத் திட்டம் தந்து, சமூக விஞ்ஞானியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக விஞ்ஞானி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதியிலே தொழிற்சாலைகள் கிடையாது. விவசாயத்தையும், நெசவுத் தொழிலையும்தான் பிரதானத் தொழிலாக நம்பி அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நெசவுத் தொழிலை நம்பி வாழ்கின்ற மக்களுடைய வாழ்வாதாரம் மேம்பட திருத்தணி பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்தால் நன்றாக இருக்கும். அந்த மக்களுடைய வாழ்வாதாரம் மேலும் வளரும். ஆகவே, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணிக்கு அருகிலே காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை 25,000 கதிர்களுடன் 4–2–1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக நடந்த வேளையிலே, பல்வேறு காரணங்களால் இலாபகரமாக இயங்க முடியாத நிலையில், அது கலைக்கப்பட்டு விட்டது. அந்த வகையிலே அங்கே பணிபுரிந்த 146 தொழிலாளர்களுக்கும் பணிக்கொடை உட்பட அனைத்து பணிக்கால பணப் பயன்களும் வழங்கப்பட்டுவிட்டன. இன்னும் அந்தக் கூட்டுறவு நூற்பாலை கலைக்கக்கூடிய நடவடிக்கையிலேதான் இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில், இதுபோன்ற நலிவுற்ற ஆறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு சுமார் 147 கோடி ரூபாய் வழங்கி,

அவை மிக இலாபகரமாக இயங்கக் கூடிய நிலையை உருவாக்கினார்கள். குறிப்பாக, ஆதி திராவிடப் பெருமக்களுக்காக இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்திலே மூடப்பட்டிருந்த ஆலைக்கு சுமார் 30 கோடி ரூபாய் வழங்கி, இன்றைக்கு அதனால் 200 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பு பெற்று, ஆலை இயங்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளார்கள்.

வருங்காலங்களில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் முதல்வராக, தொடர்ச்சியாக முதல்வராக, எதிரிகளே இல்லாத இந்த மன்றத்திலே அமரப் போகின்றார்கள். அந்த வேளையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தக் கோரிக்கையை நினைவில் வைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திலே, திருத்தணி தொகுதிக்கு அருகிலேயுள்ள காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை இயங்குவதற்கு ஆவன செய்வார்கள், பரிசீலனை செய்வார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்த திருத்தணி தொகுதி நெசவாளர்கள் நிறைந்த பகுதி என்று சொன்னார்கள். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியிலே 7,975 நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, 92 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. திருத்தணி தொகுதியில் 58 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 5,903 நெசவாளர்களும், 34 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,179 நெசவாளர்களும் ஆக மொத்தம் 7,082 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் இரகங்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களில் ஒன்றான விலையில்லா கைத்தறி வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதைப்போல, விலையில்லா சீருடை இரகங்கள் உற்பத்தித் திட்டம்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு தொடர்ச்சியாகக் கொடுக்கப்படுகின்றது. இந்த 92 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 859 நெசவாளர்கள் சேமிப்பு மற்றும்

2016 பிப்ரவரி 20]

பாதுகாப்புத் திட்டத்திலே உறுப்பினர்களாக உள்ளனர். நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 23 நெசவாளர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் ஓய்வூதியமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்குகின்றது. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2,683 நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை படிக்கும் நெசவாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.1,200 வீதம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் திருத்தணி தொகுதியில் 557 நெசவாளர்களின் குழந்தைகளுக்கு 3 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மின்சாரத் திட்டத்தின்கீழ் 3,487 கைத்தறி நெசவாளர்களும், 6,255 விசைத்தறி நெசவாளர்களும் தொடர்ச்சியாக பயனடைந்து வருகின்றார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் 3,637 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். 375 நெசவாளர்களுக்கு விலையில்லா பெடல் தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 117 பசுமை வீடுகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. திருத்தணி தொகுதியைச் சேர்ந்த 520 நெசவாளர்களுக்குக் கடன் அட்டை வழங்க, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்ததில், இதுவரை 273 நெசவாளர்களுக்குக் கடன் அட்டை வழங்கப்பட்டு, 53 இலட்சம் ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர்.

நெசவாளர்கள் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் திருத்தணி தொகுதியைச் சேர்ந்த 3,637 கைத்தறி நெசவாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளிலே மருத்துவச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நெசவாளர்கள் நிறைந்த தொகுதியிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அனைத்துத் திட்டங்களையும் பெற்று, மக்கள் வளமாக இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

[2016 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதியிலே நெசவாளர்கள் மிக அதிகமாக வாழ்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்த மக்களுக்குச் செய்த நன்மைகளையெல்லாம் நீண்ட பட்டியலிட்டுக் காட்டினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

வருகின்ற காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிதான் தொடரும். அதிலே எந்த மாற்றமும் கிடையாது. அப்படி அமைகின்ற காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக திருத்தணிக்கு கூட்டுறவு நூற்பாலை அமைத்துத் தர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன். மீண்டும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 14–வது சட்டமன்றப் பேரவையினுடைய கடைசி நாள். இந்த நாளில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி அமைத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக 9 பேர் வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்து, இப்பொழுது 8 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள், இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிறைவேற்றப்பட்டபோது, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அந்தத் தீர்மானங்களை ஆதரித்துள்ளோம். குறிப்பாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழ் ஈழ மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், குடியமர்த்தப்பட வேண்டும், வாழ்வுரிமை அளிக்கப்பட வேண்டும், நீதி அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளின்மீதும், முல்லைப் பெரியாறு, காவேரி*

2016 பிப்ரவரி 20]

நீர்ப் பிரச்சினை போன்று தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆதரித்து, உங்களோடு உடனிருந்து இருக்கின்றது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம்: இந்தச் சட்டமன்றப் பேரவையில் தொடர்ச்சியாக நடைபெற்ற பல்வேறு நடவடிக்கைகள்—தொகுதிப் பிரச்சினைகள், மாநிலப் பிரச்சினைகள் என அனைத்திலும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: கேள்வியைத்தான் கேட்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், இன்னும் இருக்கக்கூடிய அனைவரும், உங்களோடு ஒத்துழைப்பாகப் பணியாற்றியிருக்கின்றோம். பல்வேறு முரண்பாடுகள் வந்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நீங்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பேசினீர்கள். அப்பொழுது இதுகுறித்து பேசியிருக்கலாம் இல்லையா?

திரு. எம். ஆறுமுகம்: சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. இன்று நேரம் இல்லை. இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன.

திரு. எம். ஆறுமுகம்: இதோ முடித்துவிடுகிறேன். இங்கு பணியாற்றக்கூடிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர், துணைச் செயலாளர்கள் மற்றும் இன்னும் இருக்கக்கூடிய அதிகாரிகள், அத்துணை பேருக்கும் நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும், குழுவின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. தற்போது 5 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. இயங்காத கூட்டுறவு நூற்பாலைகளை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றால், அந்த இடங்களை விற்பனை செய்து, நவீன தொழில்நுட்பரீதியிலான புதிய ஆலைகளைத் தொடங்குவதற்கும், அவற்றில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குமான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வினாவிற்கு பதில் அளிப்பதற்கு முன்பாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்ததைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். ஒன்றேயொன்றை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து இந்த மன்றத்திலே அமரச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை எதிர்த்து ஆர்.கே. நகர் தொகுதியிலே தாங்கள் போட்டியிட்டதையும் நாங்கள் மறக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விழைகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல தமிழகத்திலே 18 கூட்டுறவு நூற்பாலைகள், 1958 முதல் 1985 வரையிலான காலகட்டங்களில், 4.70 இலட்சம் கதிர்களுடன், அரசுத் திட்டங்களுக்கான நூல் விநியோகம், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நூல் தேவையினை நியாயமான விலையிலே வழங்கும்பொருட்டு துவங்கப்பட்டன. இந்த 18 நூற்பாலைகளில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் செயலிழந்த நிலையிலே, 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின்படி கலைத்தல் நடவடிக்கைகளில் உள்ளன. அவற்றில் 5 ஆலைகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மூடப்பட்டிருந்த அச்சங்குளம் ஆலைக்கு ரூ.30 கோடி நிதியினை வழங்கி, இன்று அது

மேம்படுத்தப்பட்டு, அந்த நூற்பாலை தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்படக்கூடிய நிலையிலே இருக்கின்றது. செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளில், நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டிலே உள்ள மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் மொத்த நிலப்பரப்பான 39.95 ஏக்கரில் 5.86 ஏக்கர் நிலம் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி 28–7–2015 அன்று உயர் கல்வித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதைப்போல செயலிழந்த மற்ற நூற்பாலைகளில் வருங்காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தக்கூடியவற்றைச் செயல்படுத்த முன்வருவார்கள். மற்ற நூற்பாலைககளின் நிலங்களைத் தேவைப்படும் மற்ற துறைகளுக்கு, மாற்ற நிச்சயமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்காங்கே பணிபுரிந்த அத்துணை தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு எந்தவிதமான நிலுவைத் தொகையும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

தரம் உயர்த்துதல்

***47209—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—